இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 10 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 04 – புதன்கிழமை 20 ஆகஸ்ட் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 10 : Thiruvalluvar Year - 2056 - Aavani 04 - Wednesday 20 August 2025 - Chennai 16 Pages ₹ 5.00


### முன்னாள் படைவீரர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட

# “முதல்வரின் காக்கும் கரங்கள்” புதிய திட்டம்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.8.2025) தலைமைச் செயலகத்தில், பொதுத் துறை சார்பில் முன்னாள் படைவீரர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் பொருட்டு “முதல்வரின் காக்கும் கரங்கள்” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, 155 முன்னாள் படைவீரர்களுக்கு தொழில் தொடங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார். இந்த நிகழ்ச்சியில், மனிதவள மேலாண்மைத் துறை மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், சிறப்பு செயலாளர் மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை இயக்குநர் சஜ்ஜன்சிங் ரா சவான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக.20 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.8.2025) தலைமைச் செயலகத்தில், பொதுத் துறை சார்பில் முன்னாள் படைவீரர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் பொருட்டு “முதல்வரின் காக்கும் கரங்கள்” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, 155 முன்னாள் படைவீரர்களுக்கு தொழில் தொடங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளை வழங்கினார்.**

நாம் சுதந்திரக் காற்றை சுவாசிக்க, கொட்டும் மழையிலும், குளிரிலும் தமது இன்னுயிரையும் பொருட்படுத்தாது தாய் திருநாட்டிற்காக தங்களது இளம் வயதை இராணுவப் பணியில் கழித்து, பணிக்காலம் நிறைவு பெற்ற, ஓய்வு பெற்ற முன்னாள் படைவீரர்களின் நலன் காக்க, இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு தொகுப்பு ஊதியம் வழங்குதல், படைப் பணியில் போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு, முன்னாள் படைவீரர்களுக்கு மறுவேலை வாய்ப்பு அளித்தல், முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

### முதல்வரின் “காக்கும் கரங்கள்” திட்டம் தொடக்க விழா!

கடந்த 2024ஆம் ஆண்டு சுதந்திர தின உரையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தாய்நாட்டிற்காகத் தங்களது இளம் வயதை இராணுவப் பணியில் கழித்து, பணிக்காலம் நிறைவு பெற்ற, ஓய்வுபெற்ற முன்னாள் படைவீரர்களது பாதுகாப்பான வாழ்க்கையை உறுதி செய்திடவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், “முதல்வரின் காக்கும் கரங்கள்” என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி, முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்னாள் படைவீரர்களின் நலனிற்காக “முதல்வரின் காக்கும் கரங்கள்” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, 155 முன்னாள் படைவீரர்களுக்கு தொழில் தொடங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளை வழங்கிடும் பொருட்டு அடையாளமாக 15 முன்னாள் படைவீரர்களுக்கு ஆணைகளை வழங்கினார். இத்திட்டத்தில், 155 பயனாளிகளுக்கான திட்ட செலவினமாக ரூ.24.43 கோடி, 30% மானியத்துடன் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் முன்னாள் படைவீரர்கள் சுயதொழிலில் ஈடுபடவும் மற்றும் சிறந்த தொழில் முனைவோர்களாக மாற்றிட தேவையான நிதி மற்றும் பயிற்சிகள் வழங்கப்படும். இத்திட்டத்தில் முதற்கட்டமாக 348 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் பயனடைவர். இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் 50 கோடியே 50 இலட்சம் ரூபாயாகும்.

### திட்டத்தின் விவரங்கள்

இத்திட்டத்தின் கீழ், முன்னாள் படைவீரர்கள் பல்வேறு தொழில் தொடங்குவதற்கு ஒரு கோடி ரூபாய் வரையில் வங்கியின் மூலம் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டு, தொழில்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையில் 30 விழுக்காடு மூலதன மானியமும், 3 விழுக்காடு வட்டி மானியமும் வழங்கப்படும். மேலும், பயனடைவோருக்கு மூலதன மானியம் மற்றும் வட்டிமானியம் வழங்கப்படுவதால் கடன் சுமை குறையும்.

### விண்ணப்பத் தேர்வு முறை

இத்திட்டத்தின் கீழ், முன்னாள் படைவீரர்களிடம் இருந்து பெறப்படும் விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

### சட்ட மசோதாக்கள் மீது காலக்கெடு: குடியரசுத் தலைவர் மூலம் கேள்வி எழுப்பிய

# ஒன்றிய அரசின் ஒவ்வொரு கேள்விகளுக்கும் ஏன் பதிலளிக்க வேண்டும்?

## உச்சநீதிமன்றம் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 20 -

சட்ட மசோதாக்களுக்கு கால நிர்ணயம் தொடர்பாக, தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில், அரசியலமைப்பு சட்ட விதிகளின்படி, ஒன்றிய அரசின் மனுவை திருப்பி அனுப்ப வேண்டும் என, உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. குடியரசுத் தலைவர் மூலம் ஒன்றிய அரசு எழுப்பியுள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கத் தேவை இல்லை என்றும் தமிழ்நாடு அரசு கூறியுள்ளது.

தமிழ்நாடு சட்டப் பேரவை நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல், ஆளுநர் ஆர்.என்.ரவி இழுத்தடிப்பு செய்து வந்தார். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான மசோதாக்கள் பலவும் கிடப்பில் போடப்பட்டு முடக்கப்பட்ட நிலையில், இது குறித்து தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது. இதை விசாரித்த உச்ச நீதிமன்றம், குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர் ஆகியோர் மசோதாக்கள் மீது முடிவெடுக்க கால நிர்ணயம்



செய்து உத்தரவிட்டது. இதை தாங்கிக் கொள்ள முடியாத ஒன்றிய அரசு, குடியரசுத் தலைவர் மூலம் உச்ச நீதிமன்றத்திற்கு 14 கேள்விகளை எழுப்பியது. நேற்று தொடங்கிய இந்த மனு மீதான விசாரணையில்,

கேரளா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் கே.கே.வேணுகோபால், தமிழ்நாடு, தெலுங்கானா அரசுகள் தாக்கல் செய்த வழக்கை 2 நீதிபதிகளும், பஞ்சாப் மாநில வழக்கை 3 நீதிபதிகளும் என 5 நீதிபதிகள் விசாரித்து தீர்ப்பளித்துள்ளதாக கூறினார். முந்தைய வழக்குகளில், 5 நீதிபதிகள் கொண்ட விசாரணையை, ஒன்றிய அரசு கோரவில்லை என வாதிட்ட கே.கே. வேணுகோபால், முந்தைய வழக்குகளில், ஒன்றிய அரசு, குடியரசுத் தலைவர் மூலம் எழுப்பிய கேள்விகள் திருப்பி அனுப்பப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

இதைத் தொடர்ந்து தமிழ்நாடு சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் வில்சன், அபிஷேக் சிங்வி ஆகியோர், இது போன்று கேள்வி எழுப்ப ஒன்றிய அரசுக்கு, அரசியல் சாசன உரிமை இல்லை என்றும், அனைத்து கேள்விகளுக்கும், முந்தைய தீர்ப்புகளில் பதில் உள்ளதாகவும் கூறினர். எனவே ஒன்றிய அரசின் மனுவை திருப்பி அனுப்ப வேண்டும் என்றும் வாதிடப்பட்டது. ஒன்றிய அரசின் மனு, உச்சநீதிமன்ற தீர்ப்பின் நேர்மையை கேள்வி எழுப்புவதாக உள்ளது என அபிஷேக் சிங்வி கூறினார். பொதுவான கேள்வி என்றால் பிரச்சினை இல்லை எனக் கூறிய உச்ச நீதிமன்றம், ஒவ்வொரு தனித் தனி கேள்விகளுக்கும் ஏன் பதிலளிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

### வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தத்திற்கு எதிர்ப்பு :

# விவாதம் நடத்தக் கோரி “இந்தியா” கூட்டணி எம்.பி.க்கள் முழக்கம்!

## நாடாளுமன்ற இரு அவைகளும் ஒத்திவைப்பு!

*புதுடெல்லி, ஆக. 20 -*

*வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்த விவகாரத்தில் நாடாளுமன்றம் நேற்றும் முடங்கியது. விவாதம் நடத்த அனுமதி மறுக்கும் ஒன்றிய அரசின் பிடிவாதத்தைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தினர்..*

*பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் என்ற பெயரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டது நாடுமுழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும் என்று, கூட்டத் தொடர் தொடங்கியது முதல் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.*

*ஆனால், விவாதம் நடத்துவதில் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு விருப்பம் இல்லாததால், இரு அவைகளிலும் விவாதம் நடத்த அனுமதி மறுக்கப்படுகிறது. இந்நிலையில், நாடாளுமன்றம் நேற்று கூடியதும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் குறித்து விவாதம் நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் முழக்கங்களை எழுப்பினர். ஆனால், விவாதம் நடத்த முடியாது என சபாநாயகர் மறுத்துவிட்டார்.*

*இதனைத் தொடர்ந்து அவையின் மையப்பகுதிக்குச் சென்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டனர். இதனால் இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.*

